பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை 22.12.2024 கதிர் 045

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பின்வாங்குகின்றது ஆளும்தரப்பு

## சுமந்திரன், சாணக்கியன் நோர்வேத் தூதரிடம் சுட்டிக்காட்டு

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல்என்பவற்றுக்கானநடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதில் ஆளும்தரப்பு பின்வாங்குவது போல் தென்படுவதாக இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் நோர்வே நாட்டுத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்ரெனருக்கும், இலங்கைதமிழ்அரசுகட்சிஉறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்



மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்ஆகியோருக்கும்இடையிலான ☞ 2

### நாடாளுமன்றத் தேர்தல்

# செலவு அறிக்கை வழங்காதோர் பெயர் விவரங்கள் பொலிஸாரிடம்

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான செலவின அறிக்கைகளை வழங்காத வேட்பாளர்களின் பெயர்களை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களின் பெயர்கள்பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டு அது தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, நாடாளுமன்றத் ☞ 7

# மியான்மர் அகதிகளை பார்வையிட்ட ரிஷாத்

திருகோணமலைதிஃஜமாலியாமுஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள மியன்மார் நாட்டு ரோகிங்யர்களை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நேற்று சந்தித்தார்.

மியன்மார் அகதிகளின் நலன்களை விசாரிக்கவும் அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுப்பது தொடர்பிலும்ரிஷாட்பதியுதீன்அங்கு சென்றிருந்தார். ☞ 2

# அமைச்சர்களின் கல்வித் தகைமையை மட்டுமாவது சபையில் சமர்ப்பிக்கட்டும்

## ஆளும்தரப்புக்கு எதிர்க் கட்சி சவால்

சபாநாயகரின்கலாநிதிபட்டம்தொடர் பான சர்ச்சை வெடித்ததையடுத்து அரசாங்கம்திட்டமிட்டுஎதிர்க்கட்சியினர் மீது போலி பரப்புரைகளை முன் வைக்கின்றது. எதிர்க்கட்சியினர் தொடர்பில் ஆராய்வதை விடுத்து குறைந்தபட்சம் அமைச்சரவை அமைச்சர்களின் கல்வி தகைமை களையாவது சபையில் சமர்ப்பிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இது தொடர்பில் தெரிவித்ததாவது:

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பானசர்ச்சைவெடித்ததையடுத்து ஆளும்தரப்புக் கலவரமடைந்தது. இதனால்திட்டமிட்டுஎதிர்க்கட்சிகள் ☞ 2

# ஹட்டனில் பஸ் விபத்தில் 3 பேர் சாவு: பலர் காயம்

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்துள்ளனர்.

ஹட்டனிலிருந்துபயணித்தகுறித்த பஸ் மல்லியப்பு வாடி வீட்டுக்கருகில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

பஸ்ஸில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாகவே விபத்து இடம்பெற்றது என்றுவிசாரணைநடத்தியபொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் சாரதி, நடத்துனர் ☞ 2

# இது ரகசியம் அல்ல!

தலைமைப் பதவியைத் தக்க வைப்பதற்கான மாவை சேனாதிராசாவின் கடைசி ஆசை இன்னமும்பிரகாசமாகஒளிர்கின்றது. தான் தலைமைப் பதவியில் தொடர்கின்றார் என்றும் அது எந்த வகையில்நியாயப்படுத்தப்படுகின்றது என்றும் அவர் செயலாளருக்கு இப்போது நேரடியாகக் கடிதம் எழுதியிருக்கிறார். டிசெம்பர் 16 திகதியிடப்பட்டு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் ☞ 2

# வாக்குமூலம் பதிவு

நாடாளுமன்ற இணையத்தளத்தில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி என்று பதிவிடப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுதிணைக்களம்நாடாளுமன்ற அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று ☞ 2

# மருத்துவர் ஓய்வு வயது வர்த்தமானி வெளியீடு

அனைத்து மருத்துவர்களின் கட்டாய ஓய்வு வயதெல்லை 63 ஆக நிர்ணயம் செய்து அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் ஓய்வூதிய திருத்தச் சட்டத்தின்படி, 2022 டிசெம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மருத்துவ நிபுணர்கள், தர மருத்துவ மற்றும் பல் மருத்துவ அலுவலர்கள், மருத்துவ நிர்வாக தரத்திலுள்ள எல்லா அலுவலர்கள், பல் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பதிவுசெய் யப்பட்ட மருத்துவ தொழிலாளர்களின் கட்டாய ஓய்வு வயதெல்லை 63 ஆக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ☞ 2

# வடக்கில் அரிசி விலைகள் குறைய ஒரு மாதமாகும்

## ஆலை உரிமையாளர்கள் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் அரிசி விலை குறைய இன்னும் ஒரு மாதமாகும் என்று பிரதான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாண ☞ 7

# ஜனாதிபதிச் செயலணிகளில் பல்லினத் தன்மை அவசியம்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்திற்கான ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநித்துவம் இல்லாமையைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே முன்னாள் அமைச்சரால் இந்த விடயம் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள 18 பேர் அடங்கிய இக்குழுவில் தமிழ், முஸ்லிம் இன மக்களைப் பிரதிநிதிதுவப்படுத்தும் வகையில் யாரும் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபைத் தேர்தலுக்காக இந்தியா அழுத்தம் தரவில்லை

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் தரவில்லை. எனினும் தேர்தலை நடத்தி மாகாண அரசியல் தலைமைத்துவத்தை உரிய தரப்பினருக்கு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம். இந்தியா, ☞ 2

# ஐயப்ப பக்தர்களுக்காக பிரதமரை நேற்றுச் சந்தித்த செல்வம் எம்.பி.

## விமான கட்டணங்களைக் குறைக்க கோரிக்கை

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று பிரதமர் ஹரிணி அமலசூரியவை அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

தலைமன்னார் பகுதியில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கடற்படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள மக்கள் காணிகள், பொது இடங்கள், ஆலயங்களுக்குச்சொந்தமானகாணிகளில்இருந்தும் அரச படைகள் வெளியேறி அவற்றை மீண்டும் மக்களது பாவனைக்காக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் பிரதமரிடம் முன்வைத்தார்.

ஐயப்பன் பக்தர்கள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு யாத்திரையாகப் பயணிப்பதற்கான விமான பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அதனைக் குறைக்குமாறும் கோரினார்.

அத்துடன் கடவுச்சீட்டை பெறுவதற்காக பக்தர்கள் தமது பயணத்தின் நிமித்தம் கொழும்பு நகருக்கு பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வந்து, இந்து கலாசார அமைச்சிடம் கையெழுத்து பெற்ற பின்னரே, கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகிறது. அதைத்தளர்த்தவேண்டியும், விமான கட்டணத்தை ஒரு நிர்ணய விலையில் ☞ 7

## ''யாராவது உதவுங்களேன்''

# ரஷ்யப் படையில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட இளைஞர்களின் அங்கிருந்து கதறல்

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக முகவர்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு ரஷ்ய படையில் இணைக்கப்பட்டு போர்க்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ள வடக்கு தமிழ் இளைஞர்கள் தங்களை இலங்கைக்கு அழைத்துச்செல்வதற்குரியநடவடிக்கைகளை யாராவது முன்னெடுக்குமாறு பகிரங்கமான கோரிக்கையைமீண்டும்முன்வைத்துள்ளனர்.

பெல்ஜியம், ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக முகவர்களுக்கு பணத்தை செலுத்தி இலங்கையிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் வெளியேறியிருந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்கள் ரஷ்யப் படையில் வலிந்து இணைக்கப்பட்டு உக்ரேனுக்கு எதிரான போர்க்களத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுயனிகாந்த் பகீரதன் மற்றும் அதிஸ்டராஜா மிதுர்ஷன் ஆகியோர் தம்மை விடுவிக்க யாராவது உதவி செய்யுங்கள் என்று கதறி குரல் பதிவு மூலமாக விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாங்கள் முகவர்கள் மூலம் அழைத்து வரப்பட்டு ஏமாற்றப்பட்டுவிட்டோம். தற்போது ரஷ்யஇராணுவத்தில்இணைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் போர் நடைபெறும் எல்லைக்கு அருகில்தான் உள்ளோம். எம்முடன் பாலச்சந்திரன் என்பவரும் உள்ளார்.

ஒவ்வொரு நாளும் போர் உக்கிரமாக இடம்பெறுகிறது. நாங்கள் இருக்கின்ற இடத்துக்கு அருகில் ஆட்லறி எறிகணைகளும், ட்ரோன் மூலமான தாக்குதல்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் தற்போதும் இருக்கிறோம்.

எங்களுடன் இருந்த 19 இலங்கையர்களில் 3 பேர் இறந்துவிட்டார்கள். ஒருவரைக் காணவில்லை. அவர்களில் பலர் இலங்கை இராணுவம், கடற்படை போன்றவற்றில் இருந்தவர்கள். அவர்கள்கூட அச்சத்துடன்தான் இருக்கின்றார்கள். எங்களால் போர் எல்லையில் தொடர்ந்தும் இருக்க முடியாது.

எமது உயிருக்கு உத்தரவாதமில்லை. தயவுசெய்து எம்மை மீண்டும் இலங்கைக்கே கொண்டு செல்வதற்கு யாராவது நடவடிக்கைகளை எடுங்கள். நாங்கள் மிகத் தாழ்மையாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். எங்களை உறவுகளுடன் இணைத்துவிடுங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

முன்னதாக, குறித்த இளைஞர்களின் உறவினர்கள் ரஷ்ய தூதரகத்துக்கு மேற்படி விடயம் சம்பந்தமாக எடுத்துரைத்தபோது, ரஷ்யா இலங்கையில் இருந்து எவரையும் போருக்காக இணைத்துக் கொள்ளவில்லை என்றே பதிலளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, வெளிவிவகார அமைச்சிடம் இந்த இளைஞர்களின் விடயம் சம்பந்தமாக மனு கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்று வினவி வாரமொன்று கடந்துள்ளபோதும் இதுவரையில் உரிய பதில் அளிக்கப்படவில்லை.

## இனி இது .....

தெரிகிறது.

அதாவது வவுனியாவில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் டிசெம்பர் 14 நடந்து இரண்டு நாட்கள் கழித்து இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அவர் தலைமைப் பதவியில் இருக்கிறாரா இல்லையா என்று கேட்டு செயலாளர் எழுதிய கடிதத்திற்கும் அவர் பதிலளிக்கவில்லை. பின்னர் அவரது பதவி விலகல் கடிதத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார் என்று தெரிவித்து செயலாளர் அனுப்பிய கடிதத்திற்கும் அவர் பதிலளிக்கைவில்லை.

அவர் பதவியில் இருக்கிறாரா இல்லையா என்பது குறித்து டிசெம்பர் 28 கட்சியின் மத்திய குழு வாக்களிப்பு நடத்தித் தீர்மானிக்கும் என்று முடிவு செய்த பின்னரே அவருக்குக் கடிதம் எழுதத் தோன்றியிருக்கின்றது. அதுவும் செயலாளருக்கு நேரடியாகக் கடிதம் எழுதத் தோன்றியிருக்கின்றது.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம் சுத்த அபத்தமானதாக இருக்கின்றது. தலைமைப் பதவிக்குத் தான் ஒருபோதும் பொருத்தமற்றவர் என்பதை நிரூபிப்பதாகவும் அது அஇருக்கின்றது. தனது பதவி விலகல் கடிதத்தை தான் சிறீதரனுக்கு எழுதினார் என்றும் கட்சியின் தலைமையை சிறீதரன் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டேதான் அந்தக் கடிதத்தை எழுதினார் என்றும் சிறீதரன் தலைமைப் பொறுப்பை ஏற்காத நிலையில் தலைமைமையில் தான் தொடர்கிறார் என்றுதான் அர்த்தம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறீதரன் தலைமைப் பொறுப்பை ஏற்க முடியாத நிலையில் வழக்கு நடந்து கொண்டிருப்பது தெரியாத மாதிரியும் ஏதோ சிறீதரன் தலைமையை ஏற்பதற்கு மறுத்ததால் தான் தலைமையில் தொடர்கின்றார் என்பதைப் போலவும் அவர் கொடுத்துள்ள இந்த விளக்கம் அவர் வயோதிபத்தால் கடும் மறதி நோய்க்கு உள்ளாகிவிட்டாரோ என்கிற பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்றொரு விடயம், தனது பதவி விலகல் கடிதம் அனுப்பப்பட்ட பின்னரும் பல சந்தர்ப்பங்களில் கட்சியின் தலைவராகத் தானே செயற்பட்டார் என்பதால் தான் தான் இன்னமும் தலைவர் என்பதாக இருக்கின்றது. அதில் அவர் முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பம் தேர்தல் அறிக்கை தயாரிப்பது.

அந்த அறிக்கைத் தயாரிப்புத் தொடர்பில் மாவை எப்படிச் செயற்பட்டார் என்பதை இதே பத்தியில் அந்தக் காலப் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன் என்று ஞாபகம். பதவி விலகல் கடிதம் அனுப்பிவிட்டு திடீரென் மார்ட்டின் வீதி அலுவலகத்திற்கு வந்து தேர்தல் அறிக்கை தயாரிக்கவேண்டும் என்று அதை இதை எடுத்து வைத்துக்கொண்டு, சுமந்திரனையும் வருமாறு அழைத்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் சுமந்திரன் வேறு எங்கோ நின்றிருந்ததால் தன்னால் வரமுடியவில்லை என்று பதிலளித்திருந்தார். அதுமட்டுமல்லாமல், வழக்கம்போல தெர்தல் அறிக்கையை தான் தயார் செய்துவிட்டு அனுப்பி வைப்பார் என்பதையும் சொல்லியிருந்தார். அந்த அறிக்கையில் குறிப்பிடவேண்டியவைகள் என்று வழக்கமான சில விடயங்களைச் சுமந்திரனிடம் கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் மாவை. இந்த விவரங்கள் எல்லாவற்றையும் அப்போதே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இன்று அதையே காரணமாகக் காட்டித் தான் தலைவராகத் தொடர்வதற்கு அதுவே போதுமானது என்று அவர் நியாயப்படுத்த முயன்றிருப்பது கேவலமாக இருக்கின்றது. பதவி விலகிய ஒருவர் அலுவலகத்திற்கு வந்தால் வெளியே போ என்றா விரட்ட முடியும்? அழைத்து உபசரிப்பதுதானே தமிழர் பாரம்பரியம். அதனால் மட்டுமே ஒருவர் தலைவர் என்றாகிவிட முடியுமா என்ன?

பாவம் மாவையர் எதையோ நினைத்து எதையோ செய்து மக்கள் மத்தியில் தொடர்ந்தும் தன்னை இழிவுபடுத்திக்கொண்டே செல்கின்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

தற்போதைய அரசியல் களநிலவரம் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டதைப் போன்று வட, கிழக்கு மாகாணங்களில் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் இன்னமும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை என தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர், இருப்பினும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் என்பன தொடர்பில் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தற்போது ஆளும்தரப்பு பின்வாங்குவது போல் தென்படுவதாகவும், அவற்றுக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதை ஆளும்தரப்பு தாமதப்படுத்துகின்றது என்றும் அவர்கள் விளக்கினர்.

இருப்பினும், புதிய ஆளும்தரப்பு அதிகாரத்திற்கு வந்து சில வாரங்களே கடந்திருப்பதனால், அவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக ஒரு மதிப்பீட்டுக்கு வருவது கடினம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

## மருத்துவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மியான்மர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மியான்மரில் அரசுக்கு எதிராக சிறுபான்மை மக்கள் நடத்திவரும் ஆயுதப் போராட்டத்தை அடுத்து அங்கு ரோகிங்கிய இனத்தவர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதும், அரச படைகளின் பயங்கரவாதத்திற்கு உள்ளாவதும் தொடர்ந்து நடந்து வருகின்றது. இதனால் பாதுகாப்புத் தேடி ரோகிங்கியர்கள் வேறு நாடுகளுக்கு அகதிகளாக வெளியேறி வருகின்றார்கள். அப்படி வெளியேறியவர்கள் அடங்கிய படகு ஒன்று முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கரைக்கு அடித்துவரப்பட்டது.

கடற்படையினரால் அங்கிருந்து திருகோணமலைக்கு இழுத்து வரப்பட்ட அகதிகள் படகு திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தில் சேர்க்கப்பட்டது. அந்தப் படகில் 115 பேர் இருந்தனர். அவர்களில் மாலுமிகள் உட்பட அதன் உதவியாளர்கள் என 11 பேரை குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனையடுத்து, அவர்களை திருகோணமலை நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது 14 நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். எஞ்சியவர்களை மீரிகான தடுப்பு முகாமிற்கு அனுப்பும்படியும் அவர் உத்தரவிட்டார்.

## அமைச்சர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வி தகைமை தொடர்பிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சி தலைவர் சாதாரணதரம் உள்ளிட்ட சகல கல்வி தகைமைச் சான்றிதழ்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளதோடு மாத்திரமின்றி, அவை ஹன்சாட்டிலும் பதியப்பட்டுள்ளன. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் கலாநிதிகளுக்கும், பேராசிரியர்களுக்கும், வைத்தியர்களுக்கும் என்ன ஆனது?

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி விசேட வைத்திய நிபுணர் எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில், இலங்கை வைத்திய சபையிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குழு முறைப்பாடளித்திருந்தது.

ஓரிரு தினங்களுக்குள் அவர் வைத்தியரா அல்லது விசேட வைத்திய நிபுணரா என்பது தெரியவரும். அமைச்சர் உபாலி பன்னிலகே தொடர்பில் சமூக வலைத்தள செயற்பாட்டாளர் ஒருவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் ஏதேனுமொரு தேர்தலில் களமிறங்குவதாயின் வேட்புமனு தாக்கலுக்கு முன்னர் அந்தப் பதவிகளிலிருந்து விலகவேண்டும்.

அமைச்சர் உபாலி பன்னிலகே தேர்தலுக்கு முன்னர் பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றியிருக்கின்றார். ஆனால், வேட்புமனு தாக்கல் செய்யும்போது அவர் அந்த பதவியிலிருந்து விலகியிருக்கவில்லை. வேட்புமனு தாக்கலின் பின்னரும் தனது தொழிலுக்கான சம்பளத்தையும் பெற்றிருக்கின்றார். அது மாத்திரமின்றி அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டபோதும், முந்தைய பதவியிலிருந்து விலகவில்லை.

அவர் அமைச்சரான பின்னரும் பல்கலைக்கழக பேராசிரியருக்குரிய சம்பளத்தைப் பெற்றிருக்கின்றார். இது பாரதூரமான குற்றமாகும். எதிர்க்கட்சியினரின் தகுதிகளை ஆராய்வதற்கு முன்னர் இதற்கும் ஆளும்தரப்பு பதிலளிக்கவேண்டும். நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவின் பெயருக்கு முன்னர் கலாநிதி பட்டம் இடப்பட்டமை தொடர்பில் அவரால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குற்றப்புலனாய்வு அதிகாரிகள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்துள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், இந்த தகவல்களை வழங்கியிருப்பது சபாநாயகர் அலுவலகமாகும். அவ்வாறெனில் குற்றப்புலனாய்வு பிரிவினர் சபாநாயகர் அலுவலக அதிகாரிகளிடமே விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். இதற்கு பதிலளிக்கவேண்டியது சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவே. எனவே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு குறைந்தபட்சம் அமைச்சரவை அமைச்சர்களின் கல்வி தகைமைகளையாவது சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ஹட்டனில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட பயணிகள் 53 பேர் காயமுற்ற நிலையில் டிக்கோயா மற்றும் வட்டவளை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அட்டனைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவர், 68 வயதுடைய கண்டியைச் சேர்ந்த பெண் மற்றும் மற்றுமொரு பெண் என மூன்று பேர் உயிரிழந்தனர். பாடசாலை மாணவன் தனது சகோதரியுடன் மருந்து எடுப்பதற்காக சென்ற போதே இவ்விபத்தில் சிக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் 10 பேர் கண்டி போதனா வைத்தியசாலைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து தொடர்பாக பஸ் சாரதியிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். பஸ் கட்டுப்பாட்டை இழந்து கதவு திறக்கப்பட்டு தான் பஸ்சில் இருந்து கீழே விழுந்தார் என்று சாரதி குறிப்பிட்டார்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமரா அமைப்பின் தரவுத்தளத்தை ஹட்டன் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

விபத்து நடந்து சிறிது நேரம் கழித்து, ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தி தொடர்புடைய சிசிடிவியை அணுகி காட்சிகள் நீக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வாக்குமூலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து உதவி செயலாளர் நாயகம் உட்பட மூன்று அதிகாரிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் பெற்றிராத 'கலாநிதி' பட்டத்தை நாடாளுமன்ற இணையத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் தவறாக குறிப்பிட்டமை தொடர்பில் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

## மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனா உட்பட அனைத்து நாடுகளுடனும் இணக்கமாகச் செயற்படுவோம். ஜனவரி நடுப்பகுதியில் சீனாவுக்கு அரசமுறை விஜயத்தை மேற்கொள்வேன் என ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களை வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கேள்வி - உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் குறித்த நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

பதில் - உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. வேட்புமனுத்தாக்கல் செய்த அரசியல் கட்சிகள், அரசியல் கூட்டணிகள் ஏதும் தற்போது செயற்பாட்டு

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# கன மழையால் வவுனியா மாவட்டத்தில் 84 ஹெக்டேயர் பப்பாசி செய்கை அழிவு

## யாரும் கண்டுகொள்ளவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கம்

தொடர் கன மழையால் வவுனியா மாவட்டத்தில் 84 ஹெக்டேயர் பப்பாசி செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ள நிலையில், தமது நிலமைகளை யாரும் கண்டு கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளினுடைய பப்பாசிப் பயிற்செய்கைகள் கன மழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, பப்பாசி செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள்கனமழையால்பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் 100 வீத அழிவாக 21 ஹெக்டேயரும், 75 வீத அழிவாக 17 ஹெக்டேயரும், 50 வீத அழிவாக 21 ஹெக்டேயரும், 25 வீத அழிவாக 25 ஹெக்டேயரும் அழிவடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைகளம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பப்பாசி செய்கையாளர்கள் கருத்து தெரிவிக்கையில் -

விவசாயிகளின் பாரிய நிதிச் செலவில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசிப் பயிற்செய்கைகள் அண்மையில் பெய்த கன மழையால், சில தோட்டங்கள் முழுமையாகவும், சில தோட்டங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்கிராமசேவையாளருக்கு முறையிட்டதற்கு அமைவாக அவர், கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிப் பயிற் செய்கைகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கையை யாரும் கண்டு கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் பப்பாசித் தோட்டங்களை படம் எடுத்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தோம். அவர்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை.

இது தொடர்பில், உரிய தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்குரிய நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர். 100







# இலுப்பைக்குளத்தில் மர நடுகைத் திட்டம்

வவுனியா, ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளப் பகுதியிலே முந்நூறு மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

கமத்தொழில், கால்நடை வளர்ப்பு அமைச்சின் கீழாக சிறிய அளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் மூலமாக காலநிலைக்கு முகம் கொடுத்தல், அதன் ஊடாக மக்களை எவ்வாறு தயார்ப்படுத்தலும், வெப்பத்தை கட்டுப்படுத்தலும், மழை வீழ்ச்சியை எவ்வாறு பெறுவதும் மற்றும் மண் அரிப்பை தடுப்பதற்காகவும் குறித்த திட்டத்தின் ஊடாக மரம் நடுகை செயற்திட்டமானது முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் ஒரு கட்டமாக வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்திலே இலுப்பைக்குளப் பகுதியிலே மரநடுகை முன்னெடுக்கப்பட்டதுடன், இதனை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆரம்பித்து வைத்தார்.



குறித்த திட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஸ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட செயலாளர் சரத்சந்திர, தலைமைப்பீட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ராஜேந்திரம், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி காஞ்சனா, விவசாயிகள், கிராமமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100



# மட்டக்களப்பில் கைதி தப்பியோட்டம் தேடிப் பொலிஸார் தீவிர வேட்டை

(பர்வீஸ்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்திற்கு வழக்கு ஒன்றிற்காக குறித்த கைதி வெள்ளிக்கிழமை கொண்டு வரப்பட்ட போது குறித்த கைதி காலை 11.30 மணியளவில் தப்பியோடியுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதியாக இருந்த சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சம்மாந்துறை உடங்கா 02 பகுதியைச் சேர்ந்த ரிசாத் முகம்மட் சாதிக் (வயது 28) என்பவரே தப்பியோடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கைதி கடந்த 07 ஆம் திகதி ஹெரோயின் போதைப் பொருளுடன் சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆதரிப்போம்! அரவணைப்போம்!

பர்மா என முன்னர் அழைக்கப்பட்ட மியான்மர் நாட்டிலி ருந்து 115 அகதிகளுடன் ஒரு படகு முல்லைத்தீவில் கரை ஒதுங்கியிருக்கிறது. பின்னர் அந்தப் படகு திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிலிருந்தவர்கள் அங்குள்ள பாடசாலை ஒன்றில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். ஓட்டிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உச்சம் பெற்ற இனப்படுகொலை மற்றும் உள்நாட்டுப் போரால் உலகம் முழுவதும் அகதிகளாகத் தப்பியோடிய ஈழத் தமிழர்களுக்கும் இன்று அது முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கியிருக்கும்மியான்மர்நாட்டின்அகதிகளுக்கும்பெரியவித்தியாசம் ஒன்றுமில்லை. மியான்மரைச் சேர்ந்த ரோகிங்கியர்களே இப்படி அகதிகளாக இலங்கைக் கரையை அடைந்திருக்கிறார்கள். நிச்சயம் அவர்களின் பயண முடிவிடமாக இலங்கை இருந்திருக்காது என்று நம்பலாம். ஆனாலும் சந்தர்ப்பவசத்தால் இங்கே ஒதுங்கியிருக்கும் அவர்களை ஆதரிப்பதும் அரவணைப்பதும் எமது தார்மீகக் கடமை.

ரோஹிங்கியாக்கள் மியான்மரில் வாழும் ஒரு முஸ்லீம் இன சிறுபான்மைக் குழுவினர், அவர்கள் பல நூற்றாண்டுகளாக பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் மியான்மரில் வாழ்ந்தாலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பல தலைமுறைகளாக மியான்மரில் வாழ்ந்தாலும், ரோகிங்கியாக்கள் அதிகாரப்பூர்வ இனமாக அங்கு அங்கீகரிக்கப்படவில்லை. அவர்களுக்கு 1982 முதல் குடியுரிமையை மறுத்துள்ள மியான்மர், அவர்களை உலகின் மிகப்பெரிய நாடற்ற மக்கள்தொகையாக மாற்றியுள்ளது.

நாடற்ற மக்களான, ரோஹிங்கியாக்களின் குடும்பங்களுக்கு அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு மறுக்கப்படுகின்றன. அவர்கள் சுரண்டல், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

மியான்மரில் ரோகிங்கியாக்கள் பல தசாப்தங்களாக வன்முறை, பாகுபாடு மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். மியான்மரின் ரக்கைன் மாநிலத்தில் ஒரு பெரிய வன்முறை அலை வெடித்த பின்னர், 742,000 க்கும் அதிகமான மக்கள் – அவர்களில் பாதிப்பேர் குழந்தைகள் – பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். அவர்களின் மிகப்பெரிய வெளியேற்றம் ஒகஸ்ட் 2017 இல் தொடங்கியது. அவர்களின் முழு கிராமங்களும் அரச படைகளால் எரிக்கப்பட்டன, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கொல்லப்பட்டன அல்லது பிரிக்கப்பட்டன மற்றும் பெரும் மனித உரிமை மீறல்கள் பதிவாகியுள்ளன. மியான்மரின் தலைவியாக ஆங் சான் சூகி என்கிற அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் பதவியிலிருந்தபோதே இந்த அநியாயங்கள் நிகழ்ந்தன. ரோகிங்கியாக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டவைகள் இனப்படுகொலைகள் என்கிற குற்றச்சாட்டு உண்டு. நீண்ட காலமாகவே இராணுவத்தின் பிடியிலிருக்கும் நாடு மியான்மர். அங்கு ஜனநாயகத்தை நிலைநிறுத்தத் தொடர்ந்து போராடி வந்தவர் சூகி.

பெரும்போராட்டத்தின் பின்னர் ஜனநாயகவாதிகளிடம் இராணுவம் அட்சியை ஒப்படைத்தாலும், பெப்ரவரி 2021 இல் இராணுவம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டது. இதன் பின்னர் தொடர்ந்து அதிகரித்த வன்முறை காரணமாக 2023 இல் 1.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மியான்மருக்குள் இடம்பெயர்ந்தனர். 2023 ஆம் ஆண்டின் இறுதியில், நாட்டில் 2.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்திருந்தனர். இருந்தனர். மியான்மரில் இருந்து கூடுதலாக 1.3 மில்லியன் அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்ற நாடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், இதில் வங்கதேசத்தில் வசிக்கும் கிட்டத்தட்ட 1– லட்சம் பேர் உள்ளனர்

பெரும்பாலானோர் வங்கதேசத்தின் காக்ஸ் பஜார் பகுதியில் உள்ள குடுபலோங் மற்றும் நயாபரா அகதிகள் முகாம்களிலும் அதைச் சுற்றியும் குடியேறியுள்ளனர். – இது உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக மக்கள் எண்ணிக்கை கொண்ட முகாம்களில் ஒன்று.

முகாம்களில் உள்ள அகதிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் கல்வி, திறன்–கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான குறைந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர். இந்தோனேசியா மற்றும் மலேசியாவுக்கான ஆபத்தான கடல் வழித்தடங்களில் ரோஹிங்கியா அகதிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில், பயணம் செய்ய முயன்ற ஒவ்வொரு எட்டுப் பேரில் ஒரு ரோகிங்கியா இறந்தார் அல்லது காணாமல் போனார்.

இப்படி ஈழத் தமிழர்களுக்கு நிகராகத் துன்பங்களை அனுபவித்துவரும் மக்கள் கூட்டத்தினரே ரோகிங்கியாக்கள். எனவே அவர்களை ஆதரிப்பதும் அரவணைப்பதும் எமது தலையாய கடமை. அவர்களின் நலன்களில் அக்கறை செலுத்திப் பாதுகாப்போம்.

# இந்தியா - சீனா இடையே இலங்கை!

**கெலும் பண்டார**

ஒட்டுமொத்தசூழலில்,ஜனாதிபதிஅநுரகுமார திசநாயக்கவின் இந்திய விஜயமானது இருதரப்புஉறவுகளை மேம்படுத்துவதற்கான ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரைபடத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே கருத முடியும். இலங்கையின் புவிசார் மூலோபாயத்தின் முக்கியத்துவம் மீண்டும் ஒருமுறை இந்தப் பயணத்தின் மூலம் எதிரொலிக்கிறது, 'அண்டைநாடுகளுக்குமுதலிடம்' என்ற கொள்கை மற்றும் 'சாகர்' (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) பார்வை என்பவற்றில் இலங்கை மைய இடத்தைப் பிடித்துள்ளது என்பதை இந்தியா இந்தப்பயணத்தில்மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது.



ஜனாதிபதி திசநாயக்கவிற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடலின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் ஏற்கனவே கண்ட இணக்கப்பாடுகளைத் தவிர புதிதாக எதுவும் காணப்பட்டவில்லை.

உண்மையில், இந்த முறையும் கடந்த முறையும் கோடிட்டுக் காட்டப்பட்ட சில கருத்துக்கள் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே கூறப்பட்டு வருபவைதான். எடுத்துக்காட்டாக, மின்சாரப் பரிமாற்றத்துக்கான 'பவர் கிரிட்' இணைப்பு என்பது நீண்ட காலமாக கருத்தியல் மட்டத்தில் இருக்கும் யோசனைகள்தான். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்சவின் காலத்தில், இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஆணையர்மிலிந்தமொரகொடஇருதரப்பு உறவுகளுக்கான முன்னோக்கிய வழிகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். இரு பக்கங்களிலும் உள்ள மின்சார விநியோக மார்க்கங்களை இணைப்பது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் பெற்றோலியத்தை எடுத்துச் செல்லக்கூடிய வகையில் எண்ணெய்க் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது ஆகியவற்றை அதில் முன்மொழிந்திருந்தார். இந்தஎண்ணக்கருக்கள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது முதல் தடவையாக ஒரு கூட்டறிக்கையில் இடம்பெற்றன.

அதேபோன்று, திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் குதங்களின் மூலம் நவீனமயப்படுத்துவதுடன்,அந்தப்பிராந்தியத்தை எரிசக்திமையமாகஅபிவிருத்திசெய்வதுஎன்பது கூட்டறிக்கை மூலம் அறிக்கப்பட்ட ஒரு திட்டம் அல்ல. அதற்கான எண்ணக்கருவை இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வந்திருந்தபோது வெளிப்படுத்தினார். 2015 ஆம் ஆண்டு 'நல்லாட்சி' எனக் கூறப்பட்ட ஆளும்தரப்பு அமைக்கப்பட்ட உடனேயே பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தந்தார். இலங்கை பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் இந்த யோசனையை முன்வைத்தார். அதன் பின்னரே இரு நாடுகளின் அதிகாரிகளும் அந்தத் திசையில் முன்னேறத் தொடங்கினர்.

இப்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் காணப்படுவது கடந்த காலங்களில் பல தரப்பட்ட சந்தர்ப்பங்களில் இணங்கிக்கொள்ளப்பட்டவற்றின் வெளிப்பாடுதான். ஆளும் தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவர்கள் இந்த திட்டங்களைகுறைந்தபட்சம்கொள்கையளவில் தொடர்வதற்கான உறுதியை இப்போது வழங்கியுள்ளனர். இந்தியாவுடனான 'எட்கா' ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள்கூட நீண்ட காலமாக இடம்பெற்று வருபவைதான்.

இங்கு விவகாரம் என்னவென்றால் இந்த ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்தியும் அதன் முதுகெலும்பான ஜேவிபியும் கடுமையாக விமர்சித்து வந்திருக்கின்ற என்பதுதான். இப்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை வைத்துக்கொண்டு ஆளும் தரப்பின் கடந்த காலக் கருத்துக்கள் குறித்து எதிர்க் கட்சிகள் பிரித்து மேய்கின்றன.

எதிர்க் கட்சிகள் விமர்சித்தாலும்கூட, கூட்டறிக்கையை உன்னிப்பாகப் பார்த்தால் ஜனாதிபதி அநுரகுமார இந்தத் திட்டங்கள் அனைத்தையும்நிறைவேற்றுவதற்குத்தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார் என்ற முடிவுக்கு வருவது கடினம். உதாரணமாக, 'எட்கா' தொடர்பான பேச்சைத் தொடர அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் அதில் அவர் கையெழுத்திடுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதேபோல், இரு தரப்புக்கும் இடையே முன்மொழியப்பட்ட மற்ற முக்கிய திட்டங்கள் குறித்தும் விவாதங்கள் தொடரும். காலக்கெடுவுடனான செயல்திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், அவ்வாறு செய்வது நடைமுறைக்கு மாறானது.

மேலும், கடந்த கூட்டறிக்கையுடன் ஒப்பிடுகையில், இம்முறை சில திட்டங்கள் விடுபட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இருநாடுகளையும்நிலத்தால்இணைப்பதற்கான பாலம் குறித்த திட்டம். ஒருவேளை இந்த தருணத்தில் இலங்கை அதை முன்னுரிமைத் திட்டமாகப்பார்க்கவில்லை என்றும் கருதலாம். அதேவேளை, அரசமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக இலங்கை உறுதியளித்ததாகவும்அந்தக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

இலங்கையில் அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியமிகநீண்டகாலமாகவேகுரல்கொடுத்து வருகின்றது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பது இந்தியாவின் நீண்ட காலக் கோரிக்கை. அநுரவின் பயணத்தின்போதும் இந்த விடயம் விவாதிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி இது குறித்துப்பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்தார். ஆனால், கூட்டறிக்கையில் இந்த விடயம் சேர்க்கப்படவில்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மீன்வர் பிரச்சினைக்கானதீர்வுதொடர்பானவிவகாரமும் இதுபோன்றதுதான். கூட்டறிக்கையில் இந்த விடயம்குறிப்பிடப்பட்டுள்ளாலும்அதற்கானதீர்வு குறித்து எந்த திட்டமும் இரு தரப்புக்களிடமும் இல்லை.

அரசமைப்பின் 13 வது திருத்தம் என்பது வேறுபட்ட சூழலில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு சட்டத்தின் ஒரு பகுதியாகும். இப்போது, நாடு முழுவதிலும் இருந்து தேசிய மக்கள் சக்திக்கு ஆணை இருப்பதால், இலங்கையில் அரசியல் களம் மாறிவிட்டது. சிறுபான்மையினரின் உரிமைகளைத்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இந்தியா....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தீர்ப்பதற்கான எந்தவொரு அணுகுமுறையும் புதிய ஆணையுடன் இணைக்கப்படவேண்டும் என்று புதிய அரசாங்கம் சிந்திக்கவேண்டும். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது பற்றிய ஒரு குறிப்புக்கூட இல்லாமல்தான் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆணையைப் பெற்றது. அப்படியிருந்தும் அந்தக் கட்சியால் யாழ்ப்பாண மாவட்டத்தைகூட வெல்ல முடிந்தது, இது, வடக்கில் உள்ள தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வு அல்லது அதற்கான கோரிக்கையை இனிமேல் ஒரே அரசியல் பலமாகப் பற்றிக் கொள்ளப் போவதில்லை என்று ஆளும் தரப்பு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பை விட்டுச் சென்றிருக்கின்றது. எனவே கூட்டறிக்கையில் இந்த விடயம் இடம்பெறாமல் பார்ப்பது தேசிய மக்கள் சக்திக்கு இலகுவானதாக அமைந்திருக்கக்கூடும்.

இந்தியப் பயணத்தின் முடிவில், அந்த நாட்டுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டி நலன்களை சமரசம் செய்வதில் இங்கை இன்னும் இறுக்கமான அணுகுமுறையைக் கைக்கொள்ளவேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. இலங்கைத் துறைமுகங்களில் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் நிறுத்தப்படுவது குறித்து இந்தியா பதற்றமடைந்துள்ளமை யாவரும் அறிந்ததே. கடந்தகாலங்களில் இந்தியாவின் எதிர்ப்பைத் தொடர்ந்து, இலங்கை வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தடையும் விதித்தது, அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி இந்தியாவின் கவலைகளைப் போக்கச் செய்தது. அது சீன–இலங்கை நல்லெண்ணத்தைச் சமரசம் செய்தது.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தின்போதும், இந்தியா இது குறித்து மீண்டும் ஒருமுறை கவலை தெரிவித்திருக்கிறது. இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையேயான விவாதங்களுக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய இந்திய அயலுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி, இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தையும் உணர்திறனையும் இந்தியா சுட்டிக்காட்டியதாகக் கூறினார்.



‘ஆராய்ச்சிக் கப்பல்கள் போன்றபலபிரச்சினைகளைப் பொறுத்தமட்டில், இலங்கை அவற்றை ஊன்றிக் கவனிக்கின்றது என்பதே எங்களின் புரிதல். இருந்தாலும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. கடல்சார் பாதுகாப்பு, கடல்சார் ஆராய்ச்சி போன்ற பல நடவடிக்கைகளில் இந்தியா ஆற்றக்கூடிய பங்கை நாங்கள் எங்கள் கண்ணோட்டத்தில் முன்னிலைப்படுத்தி னோம்’ என்றார்.

‘இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு பாதகமான எதற்கும் இலங்கைப் பிரதேசத்தை பயன்படுத்துவதற்கு தனது ஆளும்தரப்பு அனுமதிக்காது என்று ஜனாதிபதி திசநாயக்க வெளிப்படையாகக் கூறி வருகிறார். இந்த பகுதியில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களின் முக்கியத்துவம் மற்றும் உணர்திறன் ஆகியவற்றை நாங்கள் சுட்டிக்காட்டினோம். இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் இலங்கையின் எந்தப் பகுதியும் பயன்படுத்தப்படாமல் இருப்பதைத் தாம் உறுதி செய்வார் என்று ஜனாதிபதி திசநாயக்க மிகவும் வெளிப்படையாகக் கூறினார். எனவே, இந்த விடயங்கள் குறித்து நாங்கள் இலங்கையுடன் தொடர்ந்தும் பேசுவோம். மேலும் இது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் இலங்கை ஆளும்தரப்புத் தொடர்ந்து உரிய கவனம் செலுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்’ என்று மிஸ்ரி தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், இந்தியாவின் கவலைகள் காரணமாக இலங்கை தனது ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு ஏற்கனவே கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறித்து சீனா மிகவும் குழப்பமடைந்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான கடல்சார் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஒத்துழைப்பின் அவசியத்தை பெய்ஜிங் தொடர்ந்து வலியுறுத்துகின்றது. சீனா தனது ஆராய்ச்சிக் கப்பல்கள் மற்றொரு நாட்டிற்கு எந்தவிதமான பாதுகாப்பு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என்று உறுதியளிக்கிறது.

ஜனாதிபதி அடுத்த மாதம் சீனாவுக்குச் செல்லவுள்ளார், அப்போது இந்தப் பிரச்சினை அங்கும் எழுப்பப்படும். அநுரவின் ஆளும்தரப்பு இந்த இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

சீனக் கப்பல்களைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவது பெய்ஜிங்குடனான உறவுகளை ஆபத்திற்குள் தள்ளும் ஆழ்த்துகிறது, இது எதிர்கால நிதி உதவி மற்றும் முதலீடுகளைப் பாதிக்கும். மறுபுறம், இந்தியாவின் பாதுகாப்புக் கவலைகளைப் புறக்கணிப்பது ஒரு முக்கியமான அண்டை நாட்டுடனான உறவைக் கெடுக்கும், பிராந்திய நல்லெண்ணம் மற்றும் மூலோபாய ஆதரவைப் பணயம் வைக்கும்.

ஜனாதிபதி திசநாயக்க இந்தியாவிற்கு அளித்த உறுதிமொழி புது டெல்லியை சமாதானப்படுத்தும் அவரது முயற்சியைப் பிரதிபலிக்கிறது. எவ்வாறாயினும், அவரது சீனப் பயணத்தின் மூலம், இந்த இரண்டு நாடுகளுடனான உறவுகளைச் சமரசம் செய்யாமல் கவனமாக பெய்ஜிங்கின் எதிர்பார்ப்புகளை அவர் வழிநடத்தவேண்டும். இலங்கை அதன் புவியியல் நெருக்கம், நாகரீக இணைப்புகள் மற்றும் பொருளாதார பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுடன் சிறப்பு உறவுகளை வைத்திருப்பது இயற்கையானது. பெய்ஜிங் அதை நிச்சயம் புரிந்துகொள்ளும்.

நன்றி: டெய்லி மிரர்



காலைக்கதிர் Kalaikkathir

### தமிழ் அரசுக் கட்சியின்

# மத்திய குழுவில் இருந்து யாரையும் நீக்க செயலருக்கு அதிகாரமில்லை

### வழக்கு தாக்கல் செய்ய இதுவே காரணம் என்கிறார் மருத்துவர் சிவமோகன்

தமிழரசுக் கட்சியின் யாப்பைமீறி செயற்பட முடியாது என்பதால் செயலாளருக்கு மத்திய குழுவில் இருந்து யாரையும் நீக்க அதிகாரம் இல்லை. இதற்கான நீதியை பெறவே யாழ். நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தேன் என முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ் அரசுக் கட்சியின் யாப்பின் அடிப்படையில் மத்திய குழு உறுப்பினர்கள் எவரையும் நிறுத்துவதற்கு அதிகாரம் இல்லை. மாவட்ட கிளை, பிரதேச கிளையில் எவரேனும் தவறு செய்திருந்தால் மாத்திரமே அது தொடர்பான முறைப்பாடு கிடைத்தால் நிறுத்துவதற்கான அதிகாரம் இருக்கின்றது.

அதைவிடுத்து மத்திய குழுவில் இருக்கும் யாரையும் நிறுத்துவதற்கு செயலாளருக்கு அதிகாரம் இல்லை. அது தவிர, தமிழ் அரசுக் கட்சிக் கூட்டம் கூடுவதாக இருந்தால் தலைவரின் கலந்துரையாடலோடு நிகழ்ச்சி நிரலை தலைவரிடம் அனுப்பி அதை தலைவர் ஏற்றுக்கொண்டு கூட்டம் கூடுவதற்கு அனுமதியை பெறவேண்டும் என்பதுடன் அந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் கூட்டத்தை நடத்தலாம் என தலைவர் கூறியதன் பின்னரே கூட்டம் கூடலாம்.

அத்துடன் தலைவரின் அனுமதிக்கு பின்னரே ஏனையவருக்கும் அந்த நிகழ்ச்சி நிரலையும் கூட்டத்துக்கான அழைப்பையும் அனுப்பலாம். இவ்வாறு தான் யாப்பு கூறுகின்றது.

தலைவர் கட்சியை வழி நடத்துபவர். செயலாளர் என்பவர் கூறுவதைச் செய்பவராகத்தான் இருப்பார். இவ்வாறு தெளிவாக யாப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே யாப்பை மீறி அனைத்தையும் செயற்படுத்திவிட முடியாது.

அதனை மையப்படுத்தியே யாழ் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்திருந்தேன். குறித்த வழக்கு தொடர்பாக சில நாள்களில் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

(100)

# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வுக்கு கிண்ணியா நகரசபையில் நிகழ்வு

(ஹலால்தீன்)





வீதி பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு கிண்ணியா நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிண்ணியா நகரசபை செயலாளர் முகமது அனீஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், கிண்ணியா பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

வீதி போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகள் சம்பந்தமாகவும், பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து செய்வதில் ஏற்பாடும் இடர்பாடுகள், எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும், வீதி விபத்துக்கள் இருந்து எவ்வாறு சமூகத்தைப் பாதுகாக்கலாம் முதலான பல்வேறு விடயங்கள் இதன் போது பேசப்பட்டன.

போக்குவரத்து செய்வதில் ஏற்படும் விளைவுகளை கட்டுப்படுத்துவது சம்பந்தமான தீர்மானங்களும் இதன் போது எடுக்கப்பட்டன.

# 'உயிர் காக்கும் உதிரக் கொடை' கல்முனை வெள்ளியன்று நிகழ்வு

(அஷ்ரப்கான்)








கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக மாபெரும் இரத்ததான முகாம் கல்முனை கடற்கரை வீதி, அல்-புஸ்ரா ஆழ்கடல் மீனவர் சங்க காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.எம்.மர்சூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரியும், பதில் வைத்திய அத்தியட்சகருமான ஏ.ஆர்.எம்.ஹாரிஸ், பொது சுகாதாரப் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி ஏ.எல். பாறூக் ஆகியோருடன் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ரீ. மருதராஜன், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கல்முனை கிளை தலைவர் மௌலவி முர்ஷித் முப்தி ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இங்கு அமைப்பின் உயர் பீட உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

### தொழிற் சங்கம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சபையில் உள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ ஜி முபாரக், கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

சுமார் 350 வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இதில் 30 வீதம் தற்போது சிறு பணியாளர்களாக கொண்டவர்களைக் கொண்டு நிரப்புதல் வேண்டும் என்றும், இது அவர்களின் பதவி உயர்விற்கான ஒரு வாய்ப்பாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு கடந்த மாதம் பரீட்சை நடத்தி பெறுபேறுகளை வெளியிட்டுள்ளமையும் இதற்கு முன்பு ஒருதடவையும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும், வேறு மாகாணங்களிலும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி கிழக்கில் ஆள்கள் சேர்க்கப்படாததையும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அதில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடம் நிரப்பப்படாததால் சேவையில் உள்ளவர்கள் இடமாற்றம் பெறுவதற்கு தடங்கலாக இருப்பதுவும், வேலைப் பழு அதிகரித்திருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியிலான அரசியலில் இல்லை. ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்து, புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மீண்டும் வேட்புமனுக்கள் கோரும் வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் சட்டமூல வரைபு எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கேள்வி - மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்- மாகாண சபை தேர்தல் விடயத்தில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண அரசியல் தலைமைத்துவத்தை உரிய தரப்பினருக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். காணப்படும் சிக்கல்களுக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும்.

கேள்வி - மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் கொடுத்ததா?

பதில்- அவ்வாறு இல்லை. மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் தரவில்லை. ஆனால் எமது தேர்தல் அறிக்கையில் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகக் குறிப்பிட்டிருந்தோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே நாங்கள் செயற்படுவோம். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

கேள்வி - இந்தியா - சீனா பூகோள அரசியல் இலங்கையில் தாக்கம் செலுத்துமா?

பதில் - அனைத்து நாடுகளுடனும் இணக்கமாகவே செயற்படுவோம். புறக்கணிக்கப்பட்ட அரசியல் மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகளை நாங்கள் கடைப்பிடிக்கவில்லை. அடுத்த மாதம் நடுப்பகுதியில் சீனாவுக்கு அரச முறை பயணத்தை மேற்கொள்வேன்.

கேள்வி வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்கு பயனுடையதாக அமையுமா?

பதில் -2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தகுதியுடைய தரப்பினரை இலக்காகக் கொண்டு நிவாரண வழங்கல் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும். நிவாரணம் வழங்குவதன் ஊடாக மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## ஐயப்ப ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீராகப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், இந்த சந்திப்பில் தலைமன்னாரில் இருந்து மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட சில பிரதிநிதிகளும் ஐயப்பன் பக்தர்களும் அவருடன் இணைந்திருந்தனர்.

## செலவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை வழங்குவதற்கான அறிவிப்பின்படி, அத்தகைய அறிக்கையை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பெயர் பட்டியல் மாவட்ட செயலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு, தேர்தல் ஆணைக்குழு தமது செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களின் பட்டியலைபொலிஸ்திணைக்களத்திற்குவழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளது.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் சந்திரசேகரன், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் வேதநாயகன் இருவரதும் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடன் அரிசி விலைக் குறைப்புத் தொடர்பான சந்திப்பு நடைபெற்றது.

ஆளும்தரப்பு அறிவித்துள்ள விலையில் வடக்கில் அரசி விற்கப்படாததற்கான காரணம் என்ன என்று ஆளுநர் கேள்வி எழுபினார்.

பதிலளித்த ஆலை உரிமையாளர்கள் இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் ஏற்கனவே ஆலைகளின் இருப்பிலுள்ள அரிசி என்பவற்றின் அடிப்படையில் போதுமான அரசிக் கையிருப்பு உள்ளதால் இனி விலை அதிகரிப்பு இருக்காது, இன்னும் ஒரு மாதத்தில் அரிசியின் விலை 200 ரூபாவை விட நிச்சயம் குறைவடையும் எனவும் குறிப்பிட்டனர்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும்கூட நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் 'லேபல்கள்' மாற்றப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்ததாவது:

அரிசியை வைத்துக்கொண்டே தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரியும். அவ்வாறான நிலைமை தொடரக்கூடாது என்பதில் ஆளும்தரப்பு கவனத்துடன் இருக்கிறது. அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நட்டமடைய வைப்பதோ மக்களைத் துன்பத்தில் வீழ்த்துவதையோ ஆளும்தரப்பு விரும்பவில்லை. எதிர்காலத்தில் 3 இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்கு ஆளும்தரப்புத் திட்டமிடுகின்றது.

நெல்லைக் கொள்வனவு செய்தபோது இருந்த விலையை ஒப்பிடும்போது தற்போது அரிசியின் விலை மிக அதிகமாக இருக்கின்றது. ஏழைகள் அதிகம் வாழும் இடம் வடக்கு மாகாணம் என்பதைக் கவனத்தில் எடுத்து சமூகப்பொறுப்புடன் செயற்படுங்கள் - என்றார்.

இங்கு கருத்து வெளியிட்ட மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், வடக்கு மாகாணத்தின் தேவையைவிட இரண்டரை மடங்கு அதிக நெல் இங்கு உற்பத்தி செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

பதிலளித்த அரிசி ஆலை உரிமையாளர்கள், வடக்கில் உற்பத்தி செய்யப்படும் நெல் வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்களால் அறுவடையின்போதே கொள்வனவு செய்யப்பட்டுவிடுகின்றது, பின்னர் அதனை அதிக விலை கொடுத்தே நாங்கள் வாங்க வேண்டியிருக்கின்றது என்று வெலை அதிகரிப்புக்கான காரணத்தைத் தெரிவித்தனர்.

"எங்களுக்கு வங்கிகள் ஊடாக அதிகளவான கடன் வசதிகள் கிடைப்பதில்லை. இங்கு போதியளவு களஞ்சிய வசதிகள் இருக்கும் நிலையில், வங்கிகள் கடன் எல்லையை அதிகரித்தால் எம்மால் விவசாயிகளிடமிருந்து அதிகளவு நெல்லைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். நெல் அறுவடைக்கு முன்னராகவே நெல்லுக்கான மற்றும் அரிசிக்கான விலையை நிர்ணயம் செய்வதன் ஊடாக இவ்வாறான நெருக்கடி நிலைமையைத் தவிர்க்க" முடியும் எனவும் குறிப்பிட்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பாலர்களின் விடுகையும் கௌரவிப்பும்

மாவடிப்பள்ளி அனைத்துபாலர்பாடசாலைகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாவடிப்பள்ளி அல் - மதீனா பாலர் பாடசாலை மற்றும் மாவடிப்பள்ளி ரஹ்மானியா பாலர் பாடசாலை ஆகியவற்றின் இவ்வாண்டுக்கான மாணவர்கள் விடுகை நிகழ்வு மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய கேட்போர் கூட்டத்தில் மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலைகள் சம்மேளன தலைவர் எம்.எச். எம். அஸ்வர் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில்விசேட அதிதிகளாகமாவடிப்பள்ளி கமு/கமு/அஸ்ரப் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். ரஜாப்டீன், கமு/கமு/ அஸ்ரப் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற எம்.ஐ.எம். சைபுத்தீன், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பிரதம பேச்சாளராக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர் மௌலவி ஏ.பி.எம். ரம்சீன் (காஸிமி) கலந்து கொண்டார்.

பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், அவர்களுக்கான கௌரவிப்பும் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்வில் இளம் சூழலியலாளர் மின்மினி மின்ஹா, மாவடிப்பள்ளி அல்-மதீனாபாலர்பாடசாலைமற்றும் மாவடிப்பள்ளி ரஹ்மானியா பாலர்பாடசாலை ஆகியவற்றின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.









## முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான வவுனியாவில் கற்பித்தல் செயலமர்வு

வவுனியா வடக்கு கல்விவலயத்திற்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் செயலமர்வு இம்மாதம் 12ஆம், 13 ஆம் திகதிகளில் வலயக்கல்விஅலுவலக மாநாட்டு மண்டபத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளர் ம.முரளீதரன் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வின் இறுதியில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களை வலயக்கல்விப்பணிப்பாளர் து.லெனின் அறிவழகனும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி வாசுகி சுதாகரும் கணக்காளர் மு.நித்தியகுமாரும் பார்வையிட்டு முன்பள்ளி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தினர்.







## தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியால் எண்ணெய் உற்பத்தியும் சரிவு

### சிறிய, நடுத்தர ஆலைகளை மூடும் நிலை



தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக சிறிய மற்றும் நடத்தர தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் தற்பொழுதுஒருமாதகாலமாகமூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அண்மையில்நாட்டில்ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு கிலோ தேங்காய் 200 ரூபாவுக்கு கொல்வளவு செய்யப்படுவதாகவும் இதன் காரணமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சுத்தமான தேங்காய் எண்ணெய் ஆயிரம் ரூபாவுக்கும் பெற முடியாத நிலையில் உள்ளதாகவும் தற்பொழுது பண்டிகை காலம் ஆகையால் தமது வாழ்வாதாரம் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த காலங்களில் பண்டிகைக்கால ஆரம்பமாகும் பொழுது தமக்கு ஓய்வின்றி தொடர்ச்சியாக இரவு பகலாக எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்படும் தற்போது பல லட்சம் ரூபா பெறுமதியான பணத்தை செலவழித்து இயந்திரங்கள் பொருத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து வந்த நிலையில் தற்பொழுது பல தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடும் நிலையில்காணப்படுவதாகவும் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். 113

## யாழில் காயங்களுடன் மீட்கப்பட்டது முதலை

யாழ்ப்பாணம் - செம்மணி வீதியில் முதலையொன்று காயங்களுடன் நேற்று (சனிக்கிழமை) மீட்கப்பட்டது.

முதலை வீதிக்கு வந்தவேளை வீதியால் சென்ற வாகனம் மோதி காயமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

முதலை மீட்கப்பட்டமை தொடர்பில் வன ஜீவராசி திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆஸ்திரேலிய நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட ஹிமாலி அருணதிலக தவறிழைக்கவில்லையாம்

## வெளிவிவகார அமைச்சர் விளக்கம்

வெளிநாடுகளில் பணியாற்றும் இராஜதந்திரிகளால் இலங்கையிலிருந்து அழைத்துச்செல்லப்படும் பணியாட்களுக்கான சம்பளத்தை அரசாங்கமே வழங்கும் என்றும், அச்சம்பளம் இலங்கையில் நடைமுறையிலிருக்கும் சம்பளநிர்ணயவிதிகளுக்கு அமைவாகவேதீர்மானிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், அதனடிப்படையில் நோக்குகையில் அண்மையில் சர்ச்சைக்குள்ளான ஹிமாலி அருணதிலகவால் எவ்வித தவறும் இழைக்கப்படவில்லை என விளக்கமளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

அங்கு தற்போது ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாகப் பதவி வகித்துவரும் ஹிமாலி அருணதிலகவுக்கு எதிராக ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு குறித்தும், இவ்விடயத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித்த ஹேரத், இராஜதந்திரிகள் வெளிநாடுகளில் பதவிகளை வகிக்கும்போது, அவர்கள் தமக்கான வீட்டுப்பணியாள்களை இலங்கையிலிருந்து அழைத்துச்செல்லமுடியும் எனவும், அப்பணியாளர்களுக்கான சம்பளம் அரசாங்கத்தால் வழங்கப்படுமே தவிர, குறித்த இராஜதந்திரியால் வழங்கப்படமாட்டாது எனவும் விளக்கமளித்தார்.

அத்தோடு மேற்குறிப்பிட்டவாறு அரசாங்கத்தால் பணியாள்களுக்கு வழங்கப்படும் ஊதியம் இலங்கையின் சம்பள நிர்ணயங்களுக்கு அமைவாகவே வழங்கப்படும் என்றும், இருப்பினும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சம்பள அளவுகோல்களுடன் ஒப்பிடுகையில் அது மிகக்குறைவான தொகையாக இருக்கக்கூடும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எனவே இராஜதந்திரி ஹிமாலி அருணதிலகவுடன் தொடர்புடைய பிரச்சினை இதனடிப்படையிலேயே தோற்றம் பெற்றிருக்கிறது. மாறாக அவர் அரசாங்கத்திடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதனை பணியாளுக்கு வழங்காமல் இருக்கவில்லை. உண்மையில் இது நாட்டின் கொள்கை சார்ந்த பிரச்சினையாகும். ஆனால் ஹிமாலி அருணதிலகவுக்கு எதிராக ஊடகங்களால் மிகமோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றால் அவர் தனிப்பட்ட ரீதியில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார். - என்றும் விஜித்த ஹேரத் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த சம்பள நிர்ணய விடயத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை எடுக்கவேண்டிய அவசியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாகத் தற்போது பதவி வகித்துவரும் ஹிமாலி அருணதிலக, 2015 - 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராகப் பணியாற்றியபோது அவரது கன்பரா இல்லத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த இலங்கையைச்சேர்ந்த பிரியங்கா தனரத்ன என்பவருக்கு உரியவாறு ஊதியத்தைச் செலுத்தவில்லை என்றும், ஆகையினால் அவர் பிரியங்காவுக்கு 543,000 டொலர்களைச் செலுத்தவேண்டும் என்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதனைத்தொடர்ந்து அண்மையில் இவ்வழக்கில் மேற்கொள்ளப்பட்ட இறுதி சமர்ப்பணத்தை அடுத்து, இராஜதந்திரிகள் எதிர்வருங்காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கிலும், இவ்வழக்கு தொடர்பான நீதிமன்ற செயன்முறையில் ஹிமாலி அருணதிலக உரியவாறு பங்கேற்காததன் காரணமாகவும் அவர் மேலும் 117,000 டொலரை பிரியங்கா தனரத்னவுக்குச் செலுத்தவேண்டும்என அந்நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தமை குறிப்பித்தக்கது.

## மாகாண சபைத் தேர்தல் முறைமை:

# சட்டச்சிக்கலுக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசுக்கே உள்ளதாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு




மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் நாடாளுமன்றத்தின் ஊடாக உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்ட சிக்கலுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்தால் மாகாண சபைத் தேர்தலை தாராளமாக நடத்தலாம்.

காலவரையறையின்றி பிற்போடப்பட் டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளேன் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது.

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்து மீண்டும் வேட்புமனுக்களை கோருமாறு அரசியல் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வதாயின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆகவே சட்டத்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரிய தீர்மானத்தை எடுத்தால் வெகுவரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தலாம்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த காலங்களிலும் பல பரிந்துரைகளை நாடாளுமன்ற தெரிவுக் குழுக்களிடம் முன்வைத்துள்ளது.

காலவரையறையின்றி பிற்போடப் பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. தேர்தல் சட்டத்திட்டங்களை பின்பற்றும் நிலையில் மக்கள் உள்ளார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சித் தலைவர்களுடனும், செயலாளர்களுடனும் பேச்சில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

தேர்தலை நடத்துவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தினதும், அரசியல்தரப்பினரினதும் பொறுப்பாகும். - என்றார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் நிந்தவூரில் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ்போதைப்பொருளுடன் மல்வத்தை விசேட அதிரடிப் படையினரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவில் உள்ள புற நகர் பகுதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக வியாழக்கிழமை இரவு நடமாடிய 34 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை சோதனை செய்த விசேட அதிரடிப்படையினர் 2 மில்லி 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

இதன் போது நீண்ட காலமாக குறித்த சந்தேக நபர் இப்பகுதியில் இப்போதைப்பொருளை விநியோகித்து வந்துள்ளதுடன் அப்போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளதாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த அவுலியா வீதி நிந்தவூர் 23 பிரிவினை சேர்ந்தவர் என்பதுடன் கைதான நிலையில் சான்று பொருள்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச பொறிமுறையாக அரச சேவையை மாற்றும் பெரும் சவால் எம்முன் உள்ளது

## ஜனாதிபதி கூறுகின்றார்

எமது நாட்டின் அரச சேவையை முறையான அரச பொறிமுறையாக மாற்றும் சவால் எம்முன் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும், புதிய குழுவின் ஊடாக அரசியல் செல்வாக்கை பொருட்படுத்தாமல், அவை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள 'நில மெதுர' கட்டடத்தில் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட செயலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க அதிபரிலிருந்து மாவட்ட செயலாளர் என பதவிப் பெயர் மாற்றம் பெற்ற இந்த சேவையானது 200 வருடங்கள் பழமையானது எனவும், எமது நாட்டை புதிய திசையில் வழிநடத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

இருப்பினும், இறுதி நோக்கம் மற்றும் இலக்கு தொடர்பில் திருப்தியடையும் வகையில் தற்போதைய நிலைமை இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அரச நிறுவனமொன்றில் நியாயமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், அரசு என்ற வகையில் முழுக் கட்டமைப்பும் சரிவை கண்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

சரிவடைந்திருக்கும், கட்டமைப்பை மீள உருவாக்க நாம் தயாரா? இல்லையா? என்பது குறித்து எம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

அரச சேவையில் இருக்கின்ற கதிரை தொடர்பான பிரச்சினை தனக்கு இல்லை எனவும், கதிரையில் அமர வைப்பதற்கு யார் இருக்கின்றார்கள் என்ற பிரச்சினையே தனக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்வாங்கி, அவற்றுக்கு இசைவான மாற்றங்களை செய்துகொண்டு , தமது துறைக்கு தலைமைத்துவம் வழங்கி அதனை வெற்றியை நோக்கி வழிநடத்தும் கதிரைகள் வெற்றிடமாக காணப்படுகின்றதென கூறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது இந்திய விஜயத்தின் போது 1500 அதிகாரிகளை இந்தியாவிற்கு அனுப்பி பயிற்சி அளிக்க இணக்கம் எட்டப்பட்டது என்றும் கூறினார்.

அடுத்த வருடத்தில் உயர்தரத்தில் சித்தியடையும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு அரசாங்கத்தின் புலமைப்பரிசில்களை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சில நிறுவனங்கள் மற்றும் பதவிகள் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டன என்பது பிரச்சினையாக உள்ளதாகவும், எமது நாட்டின் அரச சேவையை முறையான அரச பொறிமுறையாகமாற்றும்சவால்எம்முன்காணப்படுவதால், அதற்கான புதிய வியூகம் ஒன்று அவசியப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கான புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் செல்வாக்குகளை பொருட்படுத்தாமல் அவை தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

அரச சேவையை மட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லை எனவும், ஆனால் அரச சேவையை நடத்திச் செல்வதற்கான செலவில் பிரச்சினைகள் இருப்பதால், அரச சேவையை ஒரே நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து முறையான பொறிமுறைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்துப் பணிகளை நடைமுறைப்படுத்த அரசியல் அதிகார அடிப்படையில் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதாகவும், அரச அதிகாரிகளின் பங்களிப்பே இந்துப் பணிகளின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணையின் 80 வீத எதிர்பார்ப்புகளை அரசஉத்தியோகத்தர்களே வெளிப்படுத்தியுள்ளனர் என்ற வகையில், அரசியல் அதிகார தரப்பின் பணிகளுக்கு அவர்கள் இணக்கம் மற்றும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். எனவே, இவை இரண்டும் இருவேறு முரண்பாடான குழுக்கள் அல்ல என்பதையும் இரண்டும் இணக்கமான குழுக்கள் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, அரசியல் அதிகாரம் மற்றும் பொதுச் சேவையின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் இலக்குகள் சமநிலையானதாக காணப்படுவதை கடந்த மக்கள் ஆணை வெளிப்படுத்தியிருப்பதால், இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பணியே எம்முன் உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மக்களுடன் தொடர்புபடும் திட்டங்கள்மீளாய்வுசெய்யப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிஜிற்றல் அடையாள அட்டை திட்டம் விரைவுபடுத்தப்பட்டு, புதிய வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் 'கினிப் ஸ்ரீலங்கா' திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

எமது நாட்டை புதிய நிலைக்கு உயர்த்தி வைப்பதற்காக, வறுமையை ஒழித்தல், டிஜிற்றல்மயமாக்கல், சமூகத்தை கருத்தியல் ரீதியாக மாற்றியமைத்தல் என்ற மூன்று துறைகளின் கீழ் 'கிளீன் ஸ்ரீலங்கா' ஊடாக பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்த பணியை நிறைவேற்றும் போது எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அசௌகரியம், அநீதி அல்லது அசாதாரணம் இழைக்கப்பட்டால், அந்த நபரின் பாதுகாப்பிற்காக தாம் முன் நிற்பதாக உறுதியளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எவரேனும் அதிகாரியொருவர் அந்த திட்டத்தை சிதைக்கும் நோக்கில் தாமதப்படுத்துவாராயின் அதற்கும் நியாயமான முறையில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ. எச். எம். எச். அபயரத்ன, அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பி. ருவன் செனரத், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரதமரின் செயலாளர் ஜி. பிரதீப் சபுதந்திரி, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். அலோக பண்டார, மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# கிளிநொச்சி மாவட்ட செயலக உற்பத்தித்திறன் செயற்பாடு

## பார்வையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உற்பத்தித்திறன்சார்ந்த செயற்பாடுகளை பார்வையிடுவதற்காக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் வியாழக்கிழமை விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயமானது கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தின் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில், கள அனுபவப் பகிர்வுகளை பெறுவதற்காக அமைந்திருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கிளைகளுக்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் உற்பத்திதிறன்சார்ந்த செயற்பாடுகளை பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் இறுதியாக நடைபெற்ற உற்பத்தித் திறன் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொது மக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் எண்ணக்கருவுக்கமைய பொலிஸ் நிலையங்களை 5 எஸ் திட்டத்திற்கு கொண்டுவரும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் வடமாகாணத்தில் முதலாவது பொலிஸ் நிலையமாக கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையம் 5 எஸ் திட்டத்தின் கீழ் செயற்படும் முன்மாதிரி பொலிஸ் நிலையமாக திறந்து வைக்கப்பட்டிருந்தது.







குறித்த களவிஜயத்தில் இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட செயலக உற்பத்தி திறன் பிரிவின் மாவட்ட இணைப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். 113

# மூதூரில் ஒளி விழா!

(நௌபர்)

மூதூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தால் இம் முறை ஏற்பாடுகள் செய்யப்பட்ட ஒளிவிழாவானது மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீஎம்.முபாறக் தலைமையில் வெள்ளிக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பான . சமய அனுஸ்டானங்களை மூதூர் புனித அந்தோனியார் மஹாவித்தியாலய அதிபர் அருட்தந்தை கொண்பியூசியஸ் நடத்திவைத்ததோடு இதில் பல்வேறுகலை கலாசார நிகழ்வுகள் என்பனவும் நடைபெற்றன. அத்துடன் பரிசில்களும் வழங்கி மகிழ்விக்கப்பட்டன. இதில் அலுவலக ஊழியர்களும் இன்னும் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.








# தேர்தலில் அனுர அரசு மக்கள் முன் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றவேயில்லை

## சிவாஜிலிங்கம் காட்டம்



புதிய அரசாங்கம் தனது ஆட்சியிலே இடம் பெறுவதாக குறிப்பிட்ட எந்த விடயங்களும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

13 ஆம் திருத்த சட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்தியா செயற்பட்டு வருகின்ற போதிலும் எமது புதிய அரசாங்கம் அதில் பெருமளவு கரிசனை காட்டவில்லை என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஜனாதிபதி இந்தியா சென்று இந்திய பிரதமருடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அனைத்து தமிழ் தரப்பினுடைய கோரிக்கையாக இருந்து வருவது சமஸ்டி கோரிக்கையாகும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை அரசமைப்பில் இருந்தும் கூட அவை அமுல்படுத்தப்படவில்லை.

தற்போது இந்தியாவை சந்தித்த ஜனாதிபதி கூட அரசியல் உரிமை தொடரில் எந்த விதமான திட்டவட்டமான உறுதிமொழிகளையும் வழங்கவில்லை. அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அரசமைப்பு என்பது பழைய மொந்தையிலேயே புதிய கள்ளு போன்று இருக்குமே தவிர எவ்வித தீர்வும் கொண்டதாக இருக்கப்போவதில்லை.

முதல் தடவையாக இனவாதத்தைக் கொண்டிருக்ககூடியஓர் அரசுபதவிஏற்றிருக்கிறது. இவ்வாறுமிகப்பெரும்வெற்றி பெற்றும் கூட அவர்களது சிந்தனையில் பாரிய மாற்றம் இல்லை. ஒற்றை ஆட்சியை வைத்துக்கொண்டு தான் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல செயற்பட்டு வருகிறார்கள்.

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமையை முன்வைப்பதற்கான கோரிக்கையை அரசாங்கத்திற்கு முன்வைக்க வேண்டும் பல உயிர் தியாகங்களை செய்த பின்பும் நாம் பிரிந்து செயற்பட முடியாது. எனவே அனைவரையும் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுவதாகவும் இதன் போது குறிப்பிட்டார்.

இதற்கு புலம்பெயர்ந்தவர்களும் ஈழத்தில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ்த் தேசிய அணியினரும் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

2013 ஆம் ஆண்டு சட்டசபையில் ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு கோரிக்கை முன்வைத்து அதனை உறுதியுடன் செயற்படுத்தி இருந்தார். அதே கோரிக்கையோடு தான் தற்போது விஜய்யினுடைய கட்சியும் முன்னோக்கி செல்கிறது.

அதேபோல தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்களும் ஒரே கோரிக்கையுடன் பயணிப்போமாக இருந்தால் அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை தமிழரசுக்கட்சி 75 ஆண்டுகளை தாண்டியும் தற்போதும் தலைமைத்துவம் இல்லாத நிலையில் இலங்கை நீதிமன்றத்தை நாடுகின்ற நிலைமையே காணப்படுகிறது.

எனவே அவர்கள் சமஸ்டியை கைவிட்டு ஒரு கூட்டு சமஸ்டி ஊடாக அனைவரையும் உள்வாங்கி முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2024இல் வெளியிடப்பெற்றது